**சார்பு நீதிமன்றம், பரமத்தி.**
முன்னிலை திரு. எஸ்.நளினகுமார், பி.ஏ.பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 25–ம் நாள் திங்கட்கிழமை

**இடைநிலை ம.எண். 6/2025 இன் அ.வ.எண். 409/2018**

1. உமாவதி
2. திலகவதி ... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாலதி
2. கிருபாவதி
3. பூங்கொடி
4. சரஸ்வதி ... எதிர்மனுதாரர்கள் /பிரதிவாதிகள்

இம்மனு 13.08.2025–ம் தேதியன்று என் முன்னர் இறுதியான விசாரணைக்கு வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எம்.கலைவாணன் அவர்கள் ஆஜராகியும், 1, 2–எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. கே.சக்ரவர்த்தி அவர்கள் ஆஜராகியும், 3, 4–எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. எ.செந்தில் அவர்கள் ஆஜராகியும்,இரு தரப்பு வாதங்கள் கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

இம்மனுவானது, கடந்த 27.11.1983–தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாளுக்கு வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளின் பாட்டனார் எழுதி வைத்த உயில் பத்திரம் மற்றும் கடந்த 17.02.2006–தேதியில் வாதிகளின் தாயார், வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் சாசனம் 2–ம் அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா ஆகியவற்றை 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும் என்று கோரி, உ.வி.மு.ச. கட்டளை 11 விதி 14–ன் படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>மனுவின் சுருக்கம்</u>

மனுதாரர் அசல் வழக்கில் 9–ஆவணங்களை தாக்கல் செய்ததாகவும், அதில் 2, 3–ஆவணங்களான உயில் பத்திரம் மற்றும் பட்டா ஜெராக்சாக இருந்ததால் குறியீடு செய்ய இயலவில்லை என்றும் மேற்படி ஆவணங்கள் 1–வது எதிர்மனுதாரர் வசம் உள்ளது என்றும் ஆகவே, கடந்த 27.11.1983–தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாளுக்கு வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளின் பாட்டனார் எழுதி வைத்த உயில் பத்திரம் மற்றும் கடந்த 17.02.2006–தேதியில் வாதிகளின் தாயார், வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் சாசனம் 2–ம் அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா ஆகியவற்றை 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும் என்று கோரி, மனுதாரர்களால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>1–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 2–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனு சுத்தப்பொய்யும், மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி மனுவில் ஒரு பரிகாரமும், மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் வேறொரு பரிகாரமும் கோரப்பட்டுள்ளதால் மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் அடிப்படையில் எவ்வித உத்தரவும் பெற மனுதாரர்கள் தடைபட்டுள்ளனர். மனுதாரர்களால் தாவா பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட 2–வது ஆவணமான 27.11.1983–தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாலுக்கு ஏற்பட்ட உயில் பத்திரத்தை மனுதாரர்கள் தரப்பில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் மனு தாக்கல் செய்து நகல் எண்.159/2006 மூலம் கடந்த 19.04.2006 தேதியில் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக மேற்படி ஆணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்களால் தாவா பிராதுடன் தாக்கம் செய்யப்பட்ட 3–வது ஆவணமான 17.02.2006–தேதியில் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட உயில் சாசனத்தை மனுதாரர்கள் தரப்பில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் மனு தாக்கல் செய்து நகல்

எண் 896/2018 மூலம கடந்த 29.06.2018 தேதியில் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல மனுதாரர்களால் தாவா பிரரதுடன் தாக்கல் செய்யப்பட்ட 5–வது ஆவணமான 2–வது அபிட்ட சொத்திற்கான கம்ப்யூட்டர் பட்டா எண். 621 மனுதாரர்கள் 20.06.2018 தேதியிட்ட கணினி பட்டாவை தாக்கல் செய்துள்ளனர். மேற்படி கம்ப்யூட்டர் பட்டாவில் அசல் இவ்வெதிர்மனுதாரரிடம் இல்லை. எனவே, மனுதாரர்கள் தரப்பில் தாவாவுடன் தாக்கல் செய்துள்ள வழக்கு 2, 3– உயில் ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட நகல்களை நீதிமன்றத்தில் தாக்கம் செய்துவிட்டு மேற்படி சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகலை குறியீடு செய்ய எவ்வித மடையும் இல்லாத போது மேற்படி உயில் ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்யாமலும் அதேபோல தாவாவில் தாக்கல் செய்துள்ள 5–வது ஆவணமான கணினி பட்டாவை குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லாத போது அந்த ஆவணத்தை குறியீடு செய்யாமல்ல 2018–ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கை நடத்தாமல் கால நீட்டிப்பு செய்ய வேண்டியே குறைபாடு உள்ள இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். இவ்வெதிர்மனுதாரர் வசமுள்ள ஆவணங்களை பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தின் போது நீதிமன்றத்தில் குறியீடு செய்ய தயாராக உள்ளார். மனுதாரர்கள் 2018–ம் ஆண்டு வழக்கு தாக்கல் செய்துவிட்டு, வாதிகள் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை நடத்தாமல் தற்போது எதிர்மனுதாரர் வசமுள்ளதாக தெரிவித்து அந்த ஆவணங்களின் அடிப்படையில் வழக்கை நடத்த வேண்டும் என மனுதாரர்கள் தரப்பில் செய்திருக்கும் இம்மனு தள்ளுபடியாக வேண்டிய ஒன்றாகும். ஆகவே, இம்மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. <u>4–ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3–ம் எதிர்மனுதாரரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்</u>

மனுதாரர் மனு சுத்தப்பொய்யும், மோசடியுமானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. உடனடியாக தள்ளுபடியாகத்தக்கது. இவ்வெதிருரையில்

இவ்வெதிர்மனுதாரர் ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர ஏனையவற்றை மனுதாரரே நிரூபிக்க செய்ய வேண்டும். மனுதாரர்கள் மனு அபிடவிட்டில் 3–வது பாராவில் தாவாவில் மனுதாரர் தரப்பு ஆவணங்களாக 9 ஆவணங்களை குறியீடு செய்ய தாக்கல் செய்துள்ளதாலும் அதில் 2, 3 ஆவணங்கள் உயில் பத்திரங்களாக இருந்ததால் நீதிமன்றத்தால் குறியீடு செய்ய இயலவில்லை என்றும் மேலும் தாவா சொத்தில் பட்டாவில் ஜெராக்ஸ் ஆக இருந்ததால் அதுவும் குறியிடு செய்ய முடியவில்லை எனவும் மேற்படி ஆணைங்களின் அசல் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி வசம் உள்ளதால் மேற்படி அசல் ஆவணங்களை நீதிமன்றத்தில் ஒப்படைக்க கோரி இம்மனு தாக்கல் செய்யப்படுகிறது என்றும் அவ்வாறு 1–ம் எதிர்மனுதாரர் தரப்பில் அசல் ஆவணங்களை ஒப்படைவு செய்தால் தான் இந்த ஆவணங்களை குறியீடு செய்ய முடியும் என்றும் மேற்படி ஆவணங்கள் இவ்வழக்கிற்கு முக்கியமான ஆவணங்கள் என்றும் தெரிவித்து தாவாவில் தாக்கல் செய்துள்ள்ள 2–வது ஆவணமான 27.11.1983 தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாலுக்கு ஏற்பட்ட உயில் பத்திரம் நகல் மற்றும் 3–வது ஆவணமான 17.02.2006– தேதியில் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட உயில் சாசனம் மற்றும் 5–வது ஆவணமான 2–வது அபிட்ட சொத்தின் கம்ப்யூட்டர் பட்டா (நகல்) ஆகிய 3–ஆவணங்களையும் 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி நீதிமன்றத்தில் ஒப்படைக்க கோரி தாக்கல் செய்துள்ள இம்மனு நிலைக்கத்தக்கதல்ல. அபிடவிட்டில் நீதிமன்றத்தில் மேற்படி 3 ஆவணங்களின் அசலை நகலை 1–ம் எதிர்மனுதாரர்/1–ம் பிரதிவாதி ஒப்படைக்க வேண்டியும் அதற்கு மாறாக மனுவில் மேற்படி ஆவணங்களின் அசலை நீதிமன்றத்தில் ஒப்படைக்க வேண்டியும் மனுதாரர்கால் பரிகாரம் கோரப்பட்டுள்ளது. மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ள மேற்படி மனுவில் ஒரு பரிகாரமும், மனுவிற்கு ஆதரவாக தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டில் வேறொரு பரிகாரமும் கோரப்பட்டுள்ளதால் அடிப்படையில் எவ்வித உத்தரவும் பெற மனுதாரர்கள் தடைபட்டுள்ளனர். மனுதாரர்களால் தாவா பிராதுடன் தாக்கல் செய்யபட்ட 2–வது ஆவணமான 27.11.1983 தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாலுக்கு ஏற்பட்ட உயில் பத்திரத்தை மனுதாரர்கள் தரப்பில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் மனு தாக்கல் செய்து நகல் எண் 159/2006 மூலம் கடந்த 19.04.2006 தேதியில் நகல் பெற்று

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் மனுதாரர்களால் தாவா பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட 3-வது ஆவணமான 17.02.2006 தேதியில் வாதிகள் மற்றும் 1, 2 பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட உயில் சாசனத்தை மனுதாரர்கள் தரப்பில் வேலூர் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து நகல் மனு தாக்கல் செய்து நகல் எண்.896/2018 மூலம கடந்த 29.06.2018 தேதியில் நகல் பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாக மேற்படி ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்களால் தாவா பிராதுடன் தாக்கல் செய்யப்பட்ட 5-வது ஆவணமான 2-வது அபிட்ட சொத்திற்கு கம்ப்யூட்டர் பட்டா மனுதாரர்கள் 20.06.2018 தேதியிட்ட பட்டாவை தாக்கல் செய்துள்ளனர். எனவே மனுதாரர்கள் தரப்பில் தாவரவுடன் தாக்கல் செய்துள்ள வழக்கு 2, 3 உயில் ஆவணங்களை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட நகல்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துவிட்டு மேற்படி சார்பதிவாளர் அலுவலக சான்றிட்ட நகலை குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லாத போது, மேற்படி ஆவணங்களை நீதிமன்றத்தில் குறியீடு செய்யாமலும், அதேபோல தாவாவில் தாக்கல் செய்துள்ள 5-வது ஆவணமான கணினி பட்டாவை குறியீடு செய்ய எவ்வித தடையும் இல்லாத போது அந்த ஆவணத்தை குறியீடு செய்யாமல் 2018-ம் ஆண்டு தாக்கல் செய்த வழக்கை நடத்தாமல் கால நீட்டிப்பு செய்ய வேண்டியே குறைபாடு உள்ள இம்மனுவை மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். ஆகவே, இம்மனுவை இந்த எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்று ஆட்சேபணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இம்மனுவில் மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்பட வில்லை.

6. தற்போது இந்த மனுவில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில், மனுதாரர்கள் கூறியுள்ள காரணங்களை ஏற்று, இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதாகும்?

7. **<u>தீர்வு</u>**

இரு தரப்பு வாதங்களும், ஆவணங்களும் பரிசீலிக்கப்பட்டன.

8. மனுதாரர்கள் தரப்பில் கடந்த 27.11.1983–தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாளுக்கு வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளின் பாட்டனார் எழுதி வைத்த உயில் பத்திரம் மற்றும் கடந்த 17.02.2006–தேதியில் வாதிகளின் தாயார், வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் சாசனம் 2–ம் அயிட்ட சொத்திற்கான கணினி பட்டா ஆகியவற்றை 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒப்படைக்க உத்தரவிடவேண்டும் என்று கோரியுள்ளார். மனுதாரர் தரப்பு மேற்படி சங்கதியை பரிசீலிக்கையில், அசல் வழக்குரை சங்கதிகளை பரிசீலிக்கையில், மனுதாரர் இம்மனுவில் குறிப்பிட்டுள்ள 27.11.1983–தேதியில் வாதிகளின் தாயார் ஜெகதாம்பாளுக்கு எழுதி வைத்த உயில் மற்றும் வாதிகளின் தாயார், வாதிகள் மற்றும் 1, 2–பிரதிவாதிகளுக்கு எழுதி வைத்த உயில் ஆகியவற்றை 1–ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே, மேற்படி உயில் குறித்து தரப்பினர்களுக்கிடையே பிரச்சனை இல்லை என்பது தெரிய வருகிறது. எனவே, மேற்படி ஆவணங்கள் குறித்து பிரச்சனை எதுவும் இல்லாத நிலையில், அவைகளை மனுதாரர்கள் நிரூபிக்கவேண்டிய அவசியம் அசல் வழக்கில் இல்லை. மேலும், மேற்படி உயில்கள் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களாக உள்ளதால், அதன் சான்றிட்ட நகல்களை உரிய அலுவலகத்தில் பெற்று, மனுதாரர்கள் அசல் வழக்கில் தாக்கல் செய்வதில் பிரச்சனை எதுவும் இல்லை. இந்நிலையில், மேற்படி உயில்களின் அசலை எதற்காக 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்பதற்கு மனுதாரர்கள் இம்மனுவில் எந்த காரணமும் கூறவில்லை. எனவே, மேற்படி உயில்களின் அசலை 1–ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்ய உத்தரவிடவேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை.

9. மனுதாரர்கள் தாவா 2–ம் அயிட்ட சொத்திற்கான கணினி பட்டாவை 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒப்படைக்கவேண்டும் என்று கோரியுள்ளர். மேற்படி கணினி பட்டாவும் மனுதாரர்களால் உரிய அலுவலகத்தில் பெற்று, அசல் வழக்கில் தாக்கல் செய்ய இயலும். இந்நிலையில், மேற்படி ஆவணத்தையும் 1–ம் எதிர்மனுதாரர் இவ்வழக்கில் ஒப்படைக்கவேண்டும் என்று மனுதாரர்கள் கோரியுள்ளது ஏற்கத்தக்கதாக இல்லை. ஆகவே, இம்மனு அனுமதிக்கத்தக்கதல்ல என்று முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இத்திறந்த நீதிமன்றத்தில் 25.08.2025–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2025.08.25 16:16:45 +0530

சார்பு நீதிபதி,
பரமத்தி.